# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 2/2015

DW1– ஜீனா நாள் –02.04.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் நன்கு படித்தவர் என்பதால் எனக்கு நன்கு விவரங்கள் தெரியும். 2014ல் அசல் வழக்கு எண்.5/2014 என்று இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். நான் அந்த வழக்கில் மணிமேகலையை தரப்பினராக சேர்க்கவில்லை. தாவா சொத்துக்களின் பட்டாக்களில் என் பெயரும், என் தம்பிகள் பெயரும் என் அம்மா பெயரும் இருந்ததால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. என் அப்பா இறக்கும் வரையிலும்அவர் பெயரில் தான் பட்டா இருந்தது. என் அப்பா இறந்தபிறகு வாதி மணிமேகலையை விட்டுவிட்டு எங்கள் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டோம் என்றால் சரிதான். அவர் பெயரை பட்டாவில் சேர்க்காததற்கு காரணம் சொத்துரிமை இல்லை என்பதால் தான். நானும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து கொண்டு மணிமேகலைக்கு சொத்து கிடைக்க கூடாது என்பதற்காக அவரை விட்டுவிட்டு ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு பெற்றோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு போட்ட சமயத்தில் அசல் வழக்கு எண்.5/2014 நிலுவையில் இருந்தபோதிலும் மணிமேகலையை அந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அசல் வழக்கு எண்.5/2014ல் நான் என்ன தீர்ப்பு பெற்றிருந்தாலும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பு நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடியாக பெறப்பட்ட தீர்ப்பு என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு என் அம்மாவை நான் தான் பார்த்துக்கொண்டேன். எனது தாயாருக்கு அவர் இறப்பதற்கு 5 வருடத்திற்கு முன்பாக இருந்து மூளையில் Stroke ஏற்பட்டது. அவருக்கு அவ்வப்போது Stroke வரும். அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். அவருக்கு மூளை பாதிக்கப்பட்டிருந்தது என்று சொல்வது சரியல்ல . அவர் நன்றாக தான் இருந்தார். என் தாயார் இறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்து முற்றிலுமாக மனநிலை பாதிக்கப்பட்டு இன்னது

என்று தெரிந்து கொள்ள இயலாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவும், அம்மாவும் எப்போதும் என்னுடன் தான் இருந்தார்கள். கடைசி காலம் வரையிலும் நான் தான்அவர்களை பார்த்துக்கொண்டேன். ஈமச்சடங்கும் நான் தான் செய்தேன். மற்றவர்களை நான் ஈமச்சடங்கு செய்யவிடவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மாவை 10-15 ஆண்டுகளாக என் கட்டுப்பாட்டில் தான் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. தாவா 1, 2வது அயிட்டத்தில் கடைகள் உள்ளது. என் அப்பா காலத்தில் தான் கடைகள் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. தாவா 1வது அயிட்ட சொத்துக்கள் என் அம்மாவுடையது அல்ல என்றால் சரிதான். தாவா 4வது அயிட்ட சொத்தும் என் அப்பாவுக்கு கிடைத்த சொத்தாகதான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 2வதுஅயிட்ட சொத்தும் என் அப்பாவுக்கு வழக்கு போட்டு கிடைத்த சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தை ஒட்டி தென்புறமாக 2வது அயிட்ட சொத்தை என் தாயார் எனக்கு தானமாக கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். தாவா 1 முதல் 10 அயிட்ட சொத்துக்களில் 5 முதல் 7 இனச்சொத்துக்கள் தவிர மீதியுள்ள சொத்துக்கள் தொடச்சியாக ஒன்றுக்கொன்று இணைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.288 பிரிக்கப்படாமல் ஒன்றாக தான் உள்ளது. தாவா 1 முதல் 4 இனச்சொத்துக்கள் தொடர்ச்சியாக ஒன்றுடன்ஒன்று இணைந்து தான் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா 02.07.1992ல் 1வது அயிட்ட சொத்திற்கு ஒட்டியவாறு தென்புறமுள்ள சொத்தை தானம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த சொத்து பூர்வீக சொத்து தான். எனக்கு தானம் கொடுத்த சமயத்தில் சகோதரர்கள் இருந்தார்கள். எனக்கு தானம் கொடுத்த பத்திரத்தில் என் சகோதரர்கள் சம்மதத்தில் கையெழுத்து போட்டார்களா என்று ஞாபகமில்லை. அந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. கூட்டுக்குடும்ப சொத்தை மற்ற கூட்டுகுடும்ப பங்குரியரின் அனுமதி இல்லாமல் என் தகப்பனார் எனக்கு தானம் கொடுக்க இயலாது என்றும், அவ்வாறு கொடுத்தாலும் அந்த ஆவணத்தின்படி

எந்த உரிமையும் வராது என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மா வீட்டுக்குடித்தனம் தான் வேலைக்கு போகவில்லை. அவருக்கு தனியாக வருமானம் இல்லை. நான் 1989-ல் வேலைக்கு சென்றேன். என் பெரியப்பாவும், சித்தியும் தான் படிக்க வைத்து சாப்பாடும் போட்டார்கள். 1989 வரை எனக்கும் என் தாயாருக்கும் எந்தவித வருமானமும் இல்லை. கூட்டுகுடும்ப வருமானம் தான். தங்கராசு மற்றும் மனோகரனுக்கு 1983க்கு முன்பாக கிரைய பத்திரம் ஏற்படுத்தியது குடும்பத்தில் கடன் பெறுவதற்காக என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. 20.12.1982-ல் தங்கராசிடமிருந்து என்தாயார் பெயரில் கிரைய பத்திரமாக எழுதி வாங்கினார்கள் என்றால் சரியல்ல. 03.02.1983-ல் மனோகரனிடமிருந்து என் தாயார் பெயருக்கு என்தந்தையாரால் கிரையம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் வாங்கிய சொத்தும் கூட்டுகுடும்ப சொத்துக்கள் தான் என்றும்அவரது தனிப்பட்ட சொத்து அல்ல என்றால் சரில்ல. அந்த சொத்தை தான் என் அம்மா 03.11.2003ல் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அன்றைய தேதியில் என் அம்மா என்னுடன் தான் இருந்தார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் நன்றாகதான்இருந்தார். அவருடைய சூழ்நிலையை பயன்படுத்தி கிரையமாக எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. அவருக்கு அன்றைய தேதியில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அந்த கிரையத்திற்கு பிரதிபிரயோஜனம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.249/6 எங்கள் குடும்ப பூர்வீக சொத்துதான். 15.06.1981ல் எனது தாயார் பெயருக்கு எனது தந்தை அந்த சொத்து சம்பந்தமாக தானம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த தானப்பத்திரத்தில் என் சகோதரர்களும், வாதியும் கையெழுத்து போடவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. 15.06.1981-ல் என் தாயாருக்கு ஏற்படுத்திய தானப்பத்திரம் செல்லாது என்றும், அவ்வாறு எழுதிகொடுக்க என் அப்பாவுக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தேதியில் என் தந்தைக்கும் சகோதர்களுக்கும் இடையில்

எந்த பாகமும் ஏற்படவில்லை. 5, 6 இனச்சொத்துக்கள் பொருத்து என் தாயார் 01.06.2010 ல் தானபத்திரம் எழுதிக்கொடுத்தார். அந்த பத்திரத்தில் 5வதுஇனச்சொத்தில் ஏற்கனவே கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள சொத்தும் 6, 7 இனச் சொத்துக்களில் 1/6 பாகமும், தானம் கொடுத்ததாக உள்ளது. 6, 7 இனச்சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள் தான். என் அம்மா இந்து கூட்டுகுடும்பத்தில் பங்குரியர் அல்ல என்றால் சரியல்ல. அவரிடமிருந்து 1/6 பாகம் எழுதி வாங்கியது தவறு என்றும் அது செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. தானபத்திரம் செல்லும் என்று வைத்துக்கொண்டாலும் கூட 6, 7 இனச்சொத்துக்களில் 1/64 பாகம்தான் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 8 முதல் 12 இனச்சொத்துக்களும் என் அப்பாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான். 01.06.2010ல் ஏற்பட்ட தானபத்திரம் மூலமாக தாவா சொத்துக்கள் முழுவதும் கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் என் அம்மாவின் பாகத்தை கொடுத்துள்ளார். 8 முதல் 12 இனச்சொத்துக்களிலும் என் தாயார் அவரது 1/6 பாகத்தை தானமாக கொடுத்துள்ளார். அதற்கு அதிகமாக கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் தவறு. 8 முதல் 12 இனச்சொத்துக்களில் என் தாயாருக்கு தனிப்பட்ட முறையில் எந்தவித உரிமையும் இல்லை என்றும், அவருக்கு தானம் கொடுக்க உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் 5வது இனச்சொத்தை கிரையம் கொடுத்த போது வழக்கு விவரத்தை சொல்லி தான் விற்றேன். இந்த சொத்தை விற்ற போது 2/6 பாகத்தை தான் விற்றேன். கிரையம் செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறவில்லை. வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரையம் செய்ததால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.